# மிட்ஸ்

# ஜக்கிய சுடர்

ஜூலை - செப்டம்பர் 2022

மும்மாத இதழ்

தனிச்சுற்றுக்கு மட்டும்




AKSHAYA TELECOM
Marthandam
Contact : 9080507090
All DTH sales & service
DTH Starts from Rs.999/-
Sales & Services across
Kanyakumari District
SUN
DIRECT
airtel
airtel
TATA PLAY
VIDEOCON
d2h
TATA PLAY

ஆதரவாளர்கள்

**மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ்**
தலைவர் - மிட்ஸ்

**அருட்தந்தை. ஜாண்குமார் K.**
இயக்குநர் - மிட்ஸ்

ஆசிரியர்

**திரு. M.G. ஜோசப் பேட்ரிக் ஆன்றனி,**
M.S.W., LL.B.,

ஆசிரியர் குழு

**திருமதி. சஜிதா .S**
**திருமதி. வினிதா ராணி .T**
**திருமதி. சசிகலா .T**
**திருமதி. கிருஷ்ணகுமாரி .C**
**செல்வன். ஆல்பின் .S**

தொகுப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்

**திருமதி. V. சுனி**

வெளியீடு

**மிட்ஸ்,**
இடைவிளாகம் - கழுவன்திட்டை
குழித்துறை - 629 163, குமரி மாவட்டம்.

Ph : 04651-263390, 295690
Email : mids.marthandam@gmail.com
Website : mids.org.in

அச்சிட்டவர்

**நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,**
நாகர்கோவில்

************************

**தனிச்சுற்றுக்கு மட்டும்**

************************

# உள்ளே ...

1. இயக்குநரிடமிருந்து ................................ 4
2. மார்பக புற்றுநோய் பற்றிய சில தகவல்கள் 5
3. தெரிந்து கொள்வோம் ............................ 5
4. உலக இளைஞர் திறன் நாள் ................. 6
5. கவிதை - நட்பு ...................................... 7
6. பெண்களுக்கான வேலைவாய்ப்பு ............... 8
7. கவிதை - கல்வி ஆசிரியர் .................... 9
8. தானம் செய்வோம் உயிரை காப்போம் .... 10
9. மிட்ஸ் ஜூபிலி விழா ............................ 12
10. சமையல் குறிப்புகள் .............................. 17
11. குடும்ப வளர்ச்சித்திட்டம் - I ....................... 18
12. Changing the Way We Care ................ 18
13. கவிதை ................................................ 19
14. நண்பர்கள் குறித்து தளிர்கள் உலக மாணவர்கள் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் ......................................... 20
15. அழகு குறிப்பு ...................................... 20
16. ஓவியம் ................................................ 21
17. கணக்கு பயிற்சி .................................. 22
18. புற்றுநோய் பரிசோதனை முகாம் ............ 22
19. தளிர்கள் உலகம் ................................ 23
20. விருட்சம் என்ற கடன் திட்டம் ............... 24
21. குடும்ப வளர்ச்சித்திட்டம் - II ................ 24
22. MIDS MMWS ...................................... 20
23. குறுக்கெழுத்துப்போட்டி ........................... 25





# இயக்குநரின்
## இதயத்திலிருந்து....

### புதிய சமூக சிந்தனையுடன்...

மிட்ஸ் நிறுவனத்தின் 25-வது ஜூபிலி ஆண்டை வெற்றிநடை போட்டு பயணித்து, அடுத்த ஆண்டின் பாதையில் அடியெடுத்து வைக்கும் இத்தருணத்தில் உங்கள் அனைவருக்கும் மிட்ஸ் ஜூபிலிவிழா நல்வாழ்த்துக்களை ஐக்கிய சுடர் இதழ் வாயிலாக தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இத்தருணத்தில் சமூகத்தில் சுயநலமற்ற சேவையால் சிறப்பு நிகழ்வு ஒன்றை வெளிக்கொணர விரும்புகின்றேன்.

ஒரு பிரபலமான சமூக பேச்சாளர் ஒருவர் மும்பை மாநகரில் ஒரு சிறப்பு கூட்டத்தில் சொற்பொழிவு நிகழ்த்தியபின் வீடு திரும்புவ தற்காக ரெயில் நிலையத்திற்கு சென்றார். ரெயில் நிலையத்தில் பயணச்சீட்டு பெற்றுக் கொண்டு ரெயில் பெட்டியில் ஏறி உட்கார்ந்திருந்தார். அவருடைய இருக்கையின் பக்கத்தில் ஒரு சிறுமி ஒளிந்து இருந்தார். பயணிகளின் பயணசீட்டை பரிசோதகர் வந்து சரிபார்த்து கொண்டிருந்தார். அச்சிறுமி பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்து கொண்டிருப்பது பயணசீட்டு ஆய்வாளருக்கு தெரியவந்தது. பயணசீட்டு இல்லாமல் பயணம் செய்ய முடியாது என்று சிறுமியிடம் தெரிவித்தார். அதைப் பார்த்த சமூக பேச்சாளர் தன்னிடம் இருந்த பயணச்சீட்டை அந்த சிறுமிக்கு கொடுத்துவிட்டு புதிய பயணச்சீட்டு ஒன்றை பெற்றுக்கொண்டார்.

ரெயில் பயணம் சுமூகமாக சென்று கொண்டிருந்தது. பெங்களூர் ரெயில் நிலையத்தில் பயணிகள் அனைவரும் இறங்கி தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது அந்த சிறுமி தனக்கு ரெயிலில் பயணச்சீட்டு எடுத்துக் கொடுத்த சமூக போச்சளரின் பக்கத்தில் மெல்ல மெல்லச் சென்றாள். அந்த சிறுமிக்கு யாரும் இல்லையென்று புரிந்து கொண்ட சமூக பேச்சாளர் உடனே அந்த சிறுமியை அழைத்து கொண்டு தனக்கு தெரிந்த நண்பர் ஒருவரின் உதவியுடன் பெண்கள் விடுதியில் பாதுகாப்பாக சிறுமிக்கு தேவையான உணவு, உடை, உறைவிடம் மற்றும் சிறந்த கல்வியும் வழங்குமாறு கூறினார். அவ்வாறு சிறுமி விடுதியின் பாதுகாப்பில் இருந்து நன்கு படித்து முடித்து முதல் வகுப்பில் வெற்றி பெற்றார். படித்து முடித்த உடன் அப்பெண்ணிற்கு வெளிநாட்டில் நல்ல வருமானத்துடன் வேலையும் கிடைத்தது. ஒருநாள் அந்த பிரபல சமூக பேச்சாளர் வெளிநாட்டில் ஓர் இடத்தில் பேச்சாளராக சென்றுள்ளார். தனது பணியை முடித்துவிட்டு இந்தியாவிற்கு கிளம்ப விமான டிக்கெட் எடுக்க சென்றுள்ளார். அப்பொழுது அவருக்கான விமான டிக்கெட் ஏற்கனவே எடுக்கப்பட்டு விட்டது என்று கூறினார்கள். ஆச்சரியத்துடனும் யார் தனக்கு விமான டிக்கெட் எடுத்திருப்பார்கள் என்னும் குழப்பத்துடனும் நின்றிருந்த அவரின் முன்னால் ஓர் இளம் பெண் வந்து நின்றாள். அது வேறு யாருமல்ல அன்று ரெயில் நிலையத்தில் தன்னால் உதவி பெறப்பட்ட அச்சிறுமி தான் என்பதை அந்த இளம்பெண் விவரித்தாள். மேலும் தான் நன்முறையில் கல்வி கற்று தற்போது நல்லதொரு கம்பெனியில் வேலையும் கிடைத்து, நல்ல நிலையில் வாழ்வில் உயர்ந்து நிற்கிறேன் என்று கூறி அவருக்கு நன்றியும் தெரிவித்தார்.

ஆம் அன்பானவர்களே நாமும் நாம் வாழும் சமூதாயத்திற்கு உட்பட்ட மக்கள்

மட்டும் அல்லாமல் ஒரங்கட்டப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு இரக்கத்தின் கருவூலமாய் இருந்து உதவுவோம். இப்பணியினை செய்து வருவதில் நானும் பெரும் மகிழ்வு அடைகிறேன். மேலும் இப்பணியினை செய்து வருகின்ற மிட்ஸ் குடும்ப உறுப்பினர்கள், உதவியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள், அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

என்றும் சமூக பணியில்,
Fr. **ஜாண்குமார் K**

# மார்பக புற்றுநோய் பற்றிய சில தகவல்கள்

2020 வரையுள்ள ஆய்வுகளின்படி 13.9 லட்சம நபர்களுக்கும் 2025 வரையுள்ள ஆய்வுகளின்படி 15.7 லட்சம் நபர்கள் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

| | |
|---|---|
| முதல் இடம் | - அமெரிக்கா |
| இரண்டாம் இடம் | - சீனா |
| மூன்றாம் இடம் | - இந்தியா |
| அதிக பாதிப்பு | - Metro City |

**மார்பக புற்றுநோயின் அறிகுறிகள்**

1. மார்பக வீக்கம்
2. Nibble தடித்து காணப்படுவது
3. Nibble சுற்றிலும் சிவப்பாக மாறுதல்
4. மார்பகத்தில் தண்ணீர், பழுப்பு, இரத்தம் வடிதல்
5. முதுகில் வலி ஏற்படுதல்
6. இடுப்பு பகுதி மெலிதல்

**மார்பக புற்றுநோய் தடுக்கும் முறைகள்**

- கருத்தடை மாத்திரைகளை தவிர்க்க வேண்டும்
- Nonstict பாத்திரங்களை தவிர்க்க வேண்டும்
- Packing items ஜூஸ் தவிர்க்க வேண்டும்
- Napkin உபயோகிக்க கூடாது
- பலாப்பழ கொட்டைகள் சாப்பிட வேண்டும்
- மெட்டி, கொலுசு அணிய வேண்டும்
- லேகின்ஸ், ஜீன்ஸ் உடைகள் அணியக்கூடாது

Dr. **மினி** (Ph: 7373379417)

# தெரிந்து கொள்வோம்

இரத்தகுழாய்களின் அறுவைசிகிட்சை - அஞ்சியோ பிளாஸ்ட்டி (Angioplasty)

| | |
|---|---|
| ஊசியால் குணப்படுத்தும் | - அக்குபஞ்சர் |
| உலக படங்களை வரைந்தல் | - கார்ட்டோகிராபி |
| கைவிரல்ரேகை | - டாக்டிலோகிராபி |
| கையெழுத்து ஆராய்ச்சி | - Graphologist |
| சமூகவியல் | - ஸோசியாலஜி |
| பூஞ்சைகள் | - மைக்காலஜி |
| ஒளியின் தன்மை | - போனோலாஜி |
| ஒலியியல் | - அக்காஸ்டிக்ஸ் |
| எலும்புகள் | - ஆஸ்டியாலஜி |
| ஆல்காக்கள் | - ஆல்காலஜி அல்லது ஃபைக்காலஜி |
| பறவைகளை | - ஆர்னித்தாளஜி |
| பூச்சிகளை | - எண்டமாலஜி |
| எழுத்துக்களின் வரலாறு | - எடிமலாஜி |
| பேய்களை பற்றிய | - டெமொனாலஜி |
| வைரஸ்கள் | - வைராலஜி |
| நாணயங்கள் | - நியூமஸ்மாடிக்ஸ் |
| நுண்ணுயிரிகள் | - மைக்ரோபயாளஜி |
| தாதுஉப்புக்கள் / உலோகங்கள் | - மெட்டலார்ஜி |
| நரம்பியல் | - நியுராளஜி |
| எண்கள் | - நியூமராளஜி |
| மனோதத்துவம் | - சைக்காளஜி |
| நிலநடுக்கம் | - ஸெஸ்மாளஜி |
| குற்றவியல் | - கிரிமினோளஜி |
| குதிரைகள் | - ஹிப்போளஜி |
| இறையியல் | - தியோலஜி |
| மூளை, மண்டை ஓடு | - பிரினாலஜி |
| மலைக்குகைகள் | - ஸ்பெலியோலாஜி |
| நோய்கள் விவர அட்டவணை | - நோசாலஜி |
| விலங்கியலில் திமிங்கலம் | - சிட்டாலஜி |
| தொழில்நுட்பம் | - டெக்னாலஜி |
| பற்களை | - Odonotography |
| உணவுமுறைகள் | - காஸ்ட்ரானமி |
| அகராதித் தொகுப்பது | - லெக்ஸிகோகிராஃபி |
| பத்திரிகைத்துறை | - ஃபோர்த் எஸ்டேட் |
| மண்பாண்டம் | - ஸெராமிக்ஸ் |
| அருங்கலைகள் | - ஏஸ்தட்டிக்ஸ் |
| அஞ்சல் தலை சேகரித்தல் | - ஃபிலேட்டலி |
| பட்டுப்பூச்சி வளர்ப்பு | - செரிகல்சர் |




# உலக இளைஞர் திறன் நாள்

## (World Youth Skill Day)

மனித குலத்தின் மாண்புகளைப் பாதுகாக்கவும், சிறந்த பண்பாடுகளை போற்றி வளர்க்கவும், மேலும் உயர்வு அடைவதற்கான வழிகளை செயல்படுத்தவும் உலக நாடுகள் கூட்டாக முயற்சித்து வருகின்றன. உலக மேம்பாடு மற்றும் நாளைய உலகத்தின் வளர்ச்சி இளைஞர் கையில் தானே இருக்கிறது. இளைஞர்கள் வல்லவர்களாக திறன்படைத்தவர்களாக இருந்தால் தான் ஒவ்வொரு நாடும் உலகமும், சமூகமும் மேன்மை அடைய இயலும். இதன் அடிப்படையில் சர்வதேச இளைஞர் திறன் தினம் ஒவ்வொரு வருடமும் ஜூலை 15-ஆம் நாள் கொண்டாடப் படுகிறது.

திறன் அல்லது திறமை என்பது நமக்குள் நாமே பெற்றுக்கொண்ட பரிசு. அது அனுபவத் துடனும், ஆர்வத்துடனும், முயற்சிகளுடனும் அனுதினம் வளர்கின்றது. திறன் ஒரு நபருக்குள் தனித்துவமானது, ஒரு நபரை ஒருவர் மற்றவரிட மிருந்து வேறுபடுத்துகிறது. வேலை வாய்ப்புக்கு ஏற்றத் திறனை இளைஞர்கள் வளர்த்துக் கொள்வது அவசியம். ஏனெனில் மாறி வரும் உலக தொழில் நுட்ப மாற்றங்கள் இயந்திர மயமாகும் அல்லது கணிணிமயமாகும் வேலை வாய்ப்புக் களத்தில் இளைஞர்கள் தங்களுக்கான திறன்களை அறிந்து தங்கள் திறன்களை வளர்த்தி கொள்ள வசதிகளை செய்து தருதல் என்பது உலகளாவிய சவாலாக மாறி வருகின்றது. இளைஞர்களின் தேவைகள் அவர்கள் முன் உள்ள சாவால்கள் பற்றிய கருத்துக்கள் பல வல்லுநர்களால் வலியுறுத்தப்பட்டது. ஒருசில ஆண்டுகளுக்கு முன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு கணிப்புகளின்படி கிட்டதட்ட 74.5 மில்லியன் இளைஞர்கள் வேலையின்றி இருப்பது தெரிய வந்தது. அதிலும் வளரும் நாடுகளில் இளைஞர்கள் அதிக அளவில் வேலையின்றி இருப்பது வியப்புக்குரியது.

ஒவ்வொரு ஆண்டும் உலக இளைஞர் திறன் நாள் அனுசரிக்கப்படும் போது பல்வேறு துறைகளிலும் பத்தாண்டுகளில் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்குத் தேவையான திறன்கள் பற்றிக் கண்டறிதல், திறன் வளர்த்தலுக்கான கட்டமைப்பு களை அமைத்தல், தொழில்நுட்பத்திறன் வளர்பட்டறைகள், பயிற்சி முகாம்கள் நடத்துதல் இளைஞர்களின் பணி வாய்ப்புகள் மற்றும் பணித்திறனை மேலும் வளர்த்தல் ஆகியவை இக்கொண்டாட்டத்தின் மூலம் நம் கவனத்துக்கு கொண்டுவரப்படுகிறது. நமது அரசும் ”திறன் வளர்த்தல் மற்றும் தொழில் முனைதல் துறை” என்ற ஒரு அமைப்பை உருவாக்கி நாட்டில் உள்ள பல்வேறு தொழில் பயிற்சி கல்வி மற்றும் பயிற்சி நிலையங்களையும் ஒருங்கிணைத்தல் வேலை வாய்ப்புக்கான திறன் வளர்த்தல், தொழில் முனைவோருக்கான உதவிகளை வழங்குதல், தொழில் இடை பயிற்சிகளை நெறிப்படுத்துதல் உள்ளிட்ட செயல்களை இவ்வமைப்பு கவனிக்கிறது. திறன்மிகு இந்தியா (Skill India) திட்டத்தின் கீழ் பல்லாயிரகணக்கான இளைஞர்கள் பயிற்சி பெற்று தொழில் துவங்க உதவிகளும் பெற்றுள்ளனர். பெண்களுக்கான தொழில் பயிற்சி, டிஜிட்டல் இந்தியா, மேக் இன் இந்தியா என பல புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

தொழில்கள் முடங்கியுள்ள இன்றைய கொரோனா சூழலில் சென்ற வருடம் ”இளைஞர்களின் திறனை மறுசீரமைத்தல்” என்பதை கருப்பொருளாக கொண்டு சிந்தித்தது. உலக அளவில், பள்ளிகளும் பயிற்சி நிறுவனங்களும் பெரும்பாலும் மூடியே இருந்த நிலையில், இளைஞர்களுக்கு புத்துணர்வு ஊட்டி ஊரகப் பகுதிகளில் உள்ள பயிற்சி நிறுவனங்களின் நிலைகளை ஆய்வு செய்து வேலை வாய்ப்புகளை அறிமுகப்படுத்தி ஊக்குவித்தலே இன்றைய நிலையில் முன்னெடுக்க வேண்டிய பணியாக உள்ளது. சமூக வலைத்தள பக்கங்களில் மூழ்கி பொழுதை வீணடிக்காமல் கைத்தொழில் கற்றல் அல்லது கற்பித்தலை சில இளைஞர்களுக்கும் மேற்கொள்ளலாம். சிறு, குறு தொழில்களுக்கான அரசின் திட்டங்களை மக்களிடம் விளக்கி அதை வளர்க்க முயற்சிக்கலாம். இன்று இப்பேற்பட்ட பல தொழில் திறன் பயிற்சிகளை இளையோர் சமூகத்திற்கு நம் மறைமாவட்ட சமூக சேவை மையம் மிட்ஸ் மேற்கொள்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

இளைஞர்கள் இதயத்தில் நீங்க இடம் பிடித்துள்ள, மறைந்த திருதந்தை இரண்டாம் யோவான் பவுல் 1985 ஆம் ஆண்டை அகில உலகக் கத்தோலிக்க இளைஞர் ஆண்டாக அறிவித்தார். 2010 ஆம் ஆண்டு அதன் வெள்ளி விழா ஆண்டில் திருஅவை இளைஞர் ஆண்டாகவும், “இளைஞரே! விழித்தெழு, ஒளிவீசு” என்னும் மைய சிந்தனையை வழங்கி இளைஞர்களின் வளர்ச்சிக்கான பல செயல் திட்டங்களை இணைத்து முன்னெடுக்கவும் கேட்டுக்கொண்டது. எனவே இளைஞர்கள் தங்கள் தனித்தன்மைகளை, திறமைகளை, பலவீனங்களை அறிகின்ற இளைஞர்கள் சமூதாயத்தை தன்னம்பிக்கையுடனும் துணிவுடனும் எதிர்கொள்ள இயலும். ஆக ”உலக இளைஞர் திறன் நாள்” இளைஞர்களின் ஆற்றலை அறிந்து, நெறிப்படுத்தி நம் பாரதத்தை திறன்மிக தேசமாக மிளிரச் செய்வோம்.

திருமதி. **ச. சஜிதா**
கோள்பிங் களப்பணியாளர்




ஜாதி ஒரு பொருட்டல்ல . . . .
மதம் ஒரு பொருட்டல்ல . . . .
பணம் ஒரு பொருட்டல்ல . . . .
பொருள் ஒரு பொருட்டல்ல . . .
அழகு ஒரு பொருட்டல்ல . . .
அந்தஸ்து ஒரு பொருட்டல்ல . . .
இது . . .
அன்பிற்கு அடிபணியும் கூட்டம் !
தவற்றை தட்டிக்கேட்டு . . .
சரியானதை உணர்த்தும் !
குட்டிக்கரணம் போட்டு . . . .
குறும்புகள் பல புரியும் !
இன்பம் வந்தால் . . . .
சேர்ந்து கொண்டாடும் !
துன்பம் வந்தால்
கைகொடுத்து தூக்கிவிடும் !
இங்கு . . .
விட்டுக்கொடுக்காத . . .
சண்டைகள் உண்டு !
பொறாமை இல்லாத . . . .
இதயங்கள் உண்டு !
அஞ்சாமல் போராடும்
படைபலம் உண்டு !
ஆயிரம் உறவுகளுக்கான . . . .
பாசங்கள் உண்டு !
பசியைப் போக்கும் . . . .
தாய்மை உண்டு !
நம்பிக்கை அளிக்கும் . . .
ஆறுதல் உண்டு !
பிரிவு ஒன்றே கொடியது
இருந்தும் . . . .
குறையா அன்பு பெரியது
கண்மூடும் வேளையிலும் . . . .
கண்ணீரை அடக்கி
மகிழ்விக்கும் !
ஆபத்து நெருங்கினால் . . . .
தயங்காது ஆருயிரையும்
கொடுக்கும் !
நட்பு ! ! !

**N. திவ்யா**
*மிட்ஸ் பாத்திமாபுரம் சுயஉதவிக்குழு*




## கோழி வளர்ப்பு

நாட்டுக்கோழி வளர்ப்பிற்கு தற்போது தமிழகத்தில் மவுசு அதிகரித்து வருகிறது. லாபகரமான பண்ணை நடத்திட முறையாக பராமரிக்க வேண்டும். நோய் தடுப்பு முறைகள் குறித்து பயிற்சி பெற்றிருக்க வேண்டும். வரவு செலவுகள் குறித்து முறையாக கணக்கு வைத்திருக்க வேண்டும்.

## பராமரிப்பு முறைகள்

கூடு காற்றோட்டம் உள்ள பகுதியில் அமைத்திட வேண்டும். தரைப்பகுதியில் உமி அல்லது சவரிதும்பு அல்லது மரத்தூள் விரிக்க வேண்டும்.

## உணவு முறை

காலையில் முதலில் சுத்தமான தண்ணீர் வைக்க வேண்டும். அதன் பிறகு தீவனம் கொடுக்க வேண்டும்.

## நோய்களும் - தடுப்பு முறைகளும்

- இராணிகெட் நோய்
- கோழி காலரா
- ஓட்டுண்ணி நோய்
- பூஞ்சான் நோய்

## தடுப்பூசி

4 மாதத்திற்கு ஒருமுறை தடுப்பூசி இறக்கையில் போட வேண்டும்.

## இராணிகெட் நோய்

இது நச்சு உயிரியால் ஏற்படும் ஒருவித தொற்று நோய். தீவனம், குடிநீர், காற்று மூலம் பரவும். இந்தநோய் தாக்குதலுக்கு உள்ளான கோழிகள் வெள்ளையாகவும், பச்சையாகவும் கழியும். மூச்சுத்திணறல், நடுக்கம், வாதம் போன்றவை தோன்றும். தீவனம் உட்கொள்ளும் அளவு குறைத்து, கோழிகள் தலையை இரண்டு கால்களுக்கு இடையில் சொருகிக் கொள்ளும். இந்த நோயால் அதிகளவில் கோழிகள் இறந்துவிடும்.

கோழிகளிடம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க ஒரு கிராம் மஞ்சள் தூளை 5 லிட்டர் தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். 10 கிராம் சீரகம், 5 கிராம் மிளகு, மஞ்சள் தூள், கீழாநெல்லி, வெங்காயம், பூண்டு 5 பல் ஆகியவற்றை கலந்து அரைத்து கலவையை பாதிக்கப்பட்ட இடங்களில் பூச வேண்டும். இதற்கென தடுப்பூசிகளும் உள்ளன.

## கோழி காலரா

நுண்ணுயிரி நோயான இது பேஸ்சுரேல்லா மல்டோசிடா என்னும் நுண்மத்தால் உண்டாகிறது. இந்த நோய் தாக்கினால் கோழிகள் இரைஎடுக்காது. காய்ச்சல் ஏற்படும். தாடை வீக்கமடைந்து இருக்கும். பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு நுண்ணுயிரிக் கொல்லிக் மருந்துகளை கொடுக்க வேண்டும். கோலி செப்டிசீமியா என்ற நோய் கோழிகுஞ்சுகளை அதிகம் தாக்கும். தீவனம், காற்று, குடிநீர் மூலம் இந்த நோய் பரவும்.

## ஒட்டுண்ணி நோய்கள்

நாட்டுக்கோழிகளுக்கு ஒட்டுண்ணிகளால் ஏற்படும் பாதிப்பு மிக அதிகம். திறந்த வெளியில் நாட்டுக்கோழிகளை வளர்ப்பது, ஒட்டுண்ணிகளின் தாக்கத்துக்கு சாதகமாகிறது. எறும்பு, வண்டு, ஈ, மண்புழு போன்றவைகளை திறந்த வெளியில் கோழிகள் அதிகம் உட்கொள்வதால் ஒட்டுண்ணிகளின் பாதிப்பு ஏற்படும். இந்த நோய் பாதித்த கோழிகளுக்கு கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி குடற்புழு நீக்கம், உண்ணி நீக்கம் செய்ய வேண்டும்.

## பூஞ்சை நோய்கள்

இந்த நோய் ஆஸ்பர்ஜில்லஸ் வகை பூஞ்சை காளானால், ஈரப்பதம் அதிகம் உள்ள நிலக்கடலை,


ஏன் உண்மையாய் நடக்க வேண்டும்? மனிதனாக இருப்பதால் என்பதற்கே அதற்கு உரிய பதில் - ரஸ்கின்

சோளம் போன்ற தீவனப் பொருட்களில் உண்டாகும் நச்சுப்பொருட்களால் ஏற்படுகிறது. பாதிப்புக்குள்ளான கோழிகளின் வளர்ச்சி தடைபட்டு இறந்துவிடும். மக்கிய மற்றும் பூஞ்சான் படர்ந்த கடலைப்புண்ணாக்கு, மக்காச்சோளம் ஆகியவற்றை வழங்காமல் இருந்தால் இந்த நோய் பாதிப்பில் இருந்து தப்பலாம்.

நோய்பாதித்த கோழிகளுக்கு கண் மற்றும் மூக்கு வழியாகவும் தடுப்பூசியை அளிக்கலாம். சொட்டுமருந்தை கண் அல்லது மூக்கு துவாரம் வழியாக அளிக்க வேண்டும். தொடைப்பகுதியில் தடுப்பூசியை போடலாம். குடிநீரிலும் கோழிகளுக்கு தடுப்பு மருந்துகளை கலந்து கொடுக்கலாம்.

**கோழி அம்மை**

எல்லா பருவ கோழிகளையும் தாக்கக்கூடிய நோய் இது. தொண்டை, மூக்கு, தாடை தசை, அலகின் ஓரங்கள், வாய், கால்களில் கொப்பளங்கள் தோன்றி, புண்ணாக மாறி, பின் உலர்ந்து உதிரும்.

10 பல் பூண்டு, 10 கிராம் மஞ்சள் தூள், 50 கிராம் துளசி, வேப்பிலை, 5 கிராம் கற்பூரம், 20 கிராம் சீரகம் ஆகியவற்றை நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும். விளக்கெண்ணெய் மற்றும் வேப்பெண்ணெய்யை சம அளவில் எடுத்து சூடாக்கி, அதில் அரைப்பை கலந்து அதற்கு உண்டான திரவத்தில் சரியான அளவில் கலப்பதற்கும், குறிப்பிட்ட நேரத்தில் செலுத்துவதற்கும் தகுந்த பயிற்சி பெற்று இருக்க வேண்டும். கால்நடை மருத்துவரின் மேற்பார்வையும், ஆலோசனையும் அவசியம். காலாவதியான மருந்துகளை பயன்படுத்த கூடாது. மேலும் கோழிகளுக்கு நோய்வரும் முன்னே காக்கும் வகையில் பண்ணையில் உள்ள அனைத்து கோழிகளுக்கும் ஒரே நாளில் தடுப்பூசி போடுவது அவசியம். தடுப்பூசி போடவேண்டிய கோழிகள் ஏதாவது நோய் தாக்குதலுக்கு உள்ளானால் தனியாக கவனம் செலுத்த வேண்டும்.


*நன்றி: தினத்தந்தி*



## கல்வி - ஆசிரியர்



தாய் இல்லாமல் சேய் இல்லை - கல்வி
தாய் இல்லாமல் வாழ்வு இல்லை
வேற்றுத் தாய் பிள்ளையை
தன் பிள்ளையாய் பாவித்து
உலகறிய செய்யும்
உத்தமன் அல்லவா நீ !
அன்பை பொழியும் அன்னையாய்
பண்பை பகிரும் தந்தையாய்
ஆசியருளும் தெய்வமாய்
அறிவு பகரும் ஆசானாய்
ஆற்றல் படைத்த தோழனாய்
போராட கற்றுக்கொடுக்கும் துணைவனாய்
கல்வி என்னும் கடலை
கடக்க உதவும் நண்பனாய்
மாணவனை சாதனையாளனாக்கும்
உலகம் போற்றும் சிற்பியாய்
நன்னெறிகளை எடுத்துரைத்து
நல்வழிகாட்டும் நல்லாயனாய்
பிறர் நலன் நாடும் உத்தமனாய்
என்றும் இகத்தில் இனிதாய் வாழ
என் ஆசிரியரை போற்றுகிறேன்





# தானம் செய்வோம் உயிரை காப்போம்

## உலக உறுப்பு தான தினம்

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் 13-ஆம் தேதி சர்வதேச "உலக உறுப்பு தான தினமாக" கடைபிடிக்கப்பட்டு வருகிறது. உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இறந்த பிறகு உறுப்புகளை தானம் செய்ய மக்களை ஊக்குவிக்கவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் அனைவரும் முன்னோக்கி வந்து தங்கள் விலைமதிப்பற்ற உறுப்புகளை தானம் செய்வதாக உறுதியளிக்கப்படுகிறது. ஏனெனில் உறுப்புதானம் செய்பவர் எட்டு உயிர்களை காப்பாற்ற முடியும்.

## உடல் உறுப்பு தானம்

உடல் உறுப்பு தானம் குறித்து, திருச்சியைச் சேர்ந்த இதய சிகிட்சை நிபுணரும், உறுப்பு தானத்தில விழிப்புணர்வு ஏற்படுத்தியதாக கின்னஸ் சாதனை படைத்தவருமான டாக்டர் செந்தில்குமார் நல்லுசாமி கூறியதாவது:

உயிருடன் இருக்கும் ஒருவர், அரசின் விதிகளுக்கு உட்பட்டு தனது குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு (அதாவது அப்பா, அம்மா, சகோதரர், சகோதரி, மகன், மகள், கணவன், மனைவி ஆகிய 8 உறவுகளுக்குள் மட்டும்) இரண்டு சிறுநீரகங்களில் ஒன்று, கல்லீரலின் ஒரு பகுதியை தானமாக வழங்க முடியும். உயிரிழந்த ஒருவரிடமிருந்து கண்களை (கருவிழியை) தானமாகப் பெற முடியும்.




அதேபோல், மூளைச்சாவு அடைந்தவர்களிடமிருந்து கண், இருதயம், நுரையீரல், கல்லீரல், கிட்னி, கணையம், எலும்பு, தோல், உள்ளிட்ட உறுப்புகளை தானமாகப் பெறலாம். இதன் மூலம் அதிகபட்சமாக 12 பேருக்கு மறுவாழ்வு அளிக்க முடியும்.

## பதிவு செய்வது எப்படி

உடல் உறுப்பு தானம் செய்ய விருப்பம் உள்ளவர்கள் முதலில் தனது விருப்பத்தை குடும்பத்தினருக்கு தெரிவிக்க வேண்டும். பின்னர் தமிழக அரசின் www.tnos.org என்ற இணைய தளத்தில் பதிவு செய்து, அதற்கான அடையாள அட்டையையும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை களில் பதிவு செய்து கொள்ளலாம். இதில் பதிவு செய்தவர்கள் கண்டிப்பாக உறுப்பு தானம் செய்ய வேண்டும் என்ற கட்டாய இல்லை. தானம் செய்தவர்கள் இயற்கையாக இறந்தாலோ அல்லது மூளைச்சாவு அடைந்தாலோ அவரது குடும்பத்தினர்களின் அனுமதியுடன் உறுப்புகள் தானமாக பெறப்படும்.

## உறுப்புகளின் நேர நிலவரம்

மூளைச்சாவு அடைந்தவரின் கண்கள், சிறுநீரகம், கல்லீரல், நுரையீரல், கணையம், சிறுகுடல், எலும்புகள், தோல் ஆகியவற்றை மற்றவர்களுக்கு பயன்படுத்தலாம் அதற்கென உரிய காலக்கெடு வரையறுக்கப்பட்டிருக்கிறது. மூளைச்சாவு அடைந்தவரின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட உறுப்புகள் குறிப்பிட்ட சில மணி நேரத்திற்குள்ளாக பிறருக்கு பொருத்தப்பட வேண்டியது அவசியம். எனவே எத்தனை மணி நேரத்துக்குள் உறுப்பு தானம் செய்ய வேண்டும் என்பதற்கான காலவரையறை உள்ளது என்கிறார் சென்னை ஸ்டாலி மருத்துவக்கல்லூரி முதல்வர் பொன்னம்பல நமசிவாயம். மேலும் அவர் சொல்வது இதயம் - 6 மணி நேரம் வரையிலும், சிறுநீரகம் (kidney) 72 மணி நேரம்


சாதனைப் பட்டியலில் இடம் பெற வேண்டுமா? கடுமையாக உழைத்தால் ஒழிய அதில் இடம் பெற இயலாது - பாவசன

வரையிலும், கல்லீரல் (Liver) - 24 மணி நேரம் வரையிலும், நுரையீரல் (lungs) 4 -6 மணி நேரம் வரையிலும் கணையம் (Pancreas) 24 மணி நேரம் வரையிலும், கண் விழித்திரை (Corneas) 14 நாட்கள் வரையிலும் எலும்பு மஞ்ஜை (bone marrow)-5 நாட்கள் வரையிலும் தோல் (Skin)-5 வருடங்கள் வரையிலும், இதயத்தின் வால்வுகள் (Heart valves)-10 வருடங்கள் வரையிலும் பதப்படுத்தி வைத்திருந்து மற்றவருக்கு பயன்படுத்த முடியும். ஆகவே இது குறித்த விழிப்புணர்வை இளைஞர்களும் மாணவர்களும் தான் பொது மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்கிறார் பொன்னம்பல நமசிவாயம்.




இதை போன்று இறந்தவர்கள் உடல் இருந்தும் குறிப்பிட்ட நேரத்திற்குள் உறுப்புகளை எடுக்க வேண்டும். இல்லையென்றால் உறுப்புகள் இறக்க நேரிடும்.

### மக்களின் அறியாமை

மக்கள் உறுப்புகளை தானம் செய்வது பற்றி அறியாமலும் ஒரு விழிப்புணர்வு இல்லாமலும் அறியாமையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் ஒரு மெழுகுவர்த்தியானது தன்னையே அழித்து பிறருக்கு ஒளியை கொடுக்கிறது. இது மெழுகுவர்த்திக்கு மட்டுமே செய்ய முடியும் என்று மக்கள் அறியாமையில் இருந்துக் கொண்டிருக்கி றார்கள். ஆனால் மனிதனாலும் தன்னை அழித்து பிறருக்கு ஒளி கொடுக்க முடியும். அது எப்படியென்றால் உறுப்புகள் தானம் செய்வதன் மூலம் ஆகும். அதிலும் உயிரோடு இருக்கும் போதே செய்யும் உறுப்பு தானத்தையே உயர்ந்ததாக கருதப்படுகிறது.

### விழிப்புணர்வு

உறுப்பு தான விழிப்புணர்வை அதிகரிக்க சமூகத்தில் பிரபலமானவர்களைக் கொண்டு விழிப்புணர்வு பேரணி, பிரச்சாரம் நடத்தலாம். அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் மாணவ மாணவிகளிடம் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சிகளை நடத்தலாம். அரசு சார்பில் வழங்கப்படும் அடையாள அட்டைகள் மற்றும் பேருந்து / ரயில் பயணச்சீட்டுகளில் உறுப்பு தானம் குறித்து விழிப்புணர்வு வாசகங்களை இடம்பெறச் செய்யலாம். எனவே முடிந்தவரை உடல் உறுப்புகளை மண்ணுக்குக் கொடுக்காமல் மனிதர்கள் உயிர் வாழ கொடுப்போம்.

### தானம் செய்வதால் ஏற்படுகின்ற குணாதிசயங்கள்

உறுப்புகளை தானம் செய்யும் ஒருவர் இறந்தாலும் அவர் உறுப்புகளை உயிர் வாழ வைக்கிறார். உயிருடன் இருக்கும் போதே உறுப்புகளை தானம் செய்பவர் அவர் உறுப்பை இன்னொருவரில் வாழ்வதை பார்கிறார். இதனால் தானம் செய்வர்கள் இல்லாவிடிலும் உறுப்புகளை பெற்றுச் கொண்டவர்கள் பார்த்தே தனது வாழ்க்கையை நகர்த்துகின்றனர் உறவினர் மற்றும் அவருடைய நெருக்கமானவர்கள். மேலும் தானம் செய்தவர்களை கடவுளாக நினைக்கின்றனா். உறுப்புகளை பெற்றுக் கொண்டவர்கள் தனது நாட்டிலும், வீட்டிலும் மாமனிதனாக திகழ்ந்து உலகம் அழியும் வரையிலும் தனது பெயரை பதிக்கின்றனர்.



### இன்றைய சூழ்நிலையில் மக்கள் செய்ய வேண்டியவை

இந்த உலகத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்வது 100-இல் 50% மக்கள் ஆனால் உடல் உறுப்புகளை தானம் செய்வது 100-இல் 10% மக்கள் கூட இல்லை. உதவிகளை செய்வது போல் உறுப்புகளையும் நாம் தானம் செய்ய வேண்டும். அதற்கு விழிப்புணர்வு முகாம் நடத்த வேண்டும், உறுப்புகள் தானத்தில் இருக்கும் பயம் அகற்ற வேண்டும். இதனை அரசாங்கம் கையில் எடுத்து சமூகப்பணி நிறுவனம் மற்றும் இளையோர்களிடம் கொண்டு சேர்த்து அதற்கென திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என்றால் உயிர் சேதத்தை கட்டுப்படுத்தி உறவுகளை வளர்த்தி கொள்ளலாம்.

**"தானம் செய்வோம்**
**உயிரை காப்போம்"** என்ற நோக்குடன் அனைவரும் செயல்படுவோம்.

**S. ஆல்பின் ராஜ்**
மிட்ஸ்

# மிட்ஸ் ஜூபிலி விழா

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் சமூகப்பணி மிட்ஸ் நிறுவனத்தின் 25வது ஜூபிலி நிறைவு விழாவானது 07-07-2022 அன்று மிட்ஸ் அலுவலகத்தின் கருத்தரங்கு கூடாரத்தில் வைத்து காலை 9.30 மணிக்கு அருட்தந்தை குலசெய் பெலிக்ஸ் அவர்கள் தலைமையில் நன்றி நவில் செபத்துடன் ஆரம்பமானது.

மிட்ஸ் ஜூபிலியின் பொதுக்கூட்டமானது 11.00 மணிக்கு அனைத்து சிறப்பு விருந்தினர் களுக்கு சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜூபிலி விழா துவக்கமாக மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயரும் மிட்ஸ் நிறுவனத்தின் தலைவருமான மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். ஜூபிலி நிறைவு விழாவிற்கு மலங்கரை கத்தோலிக்க திருஅவையின் தலைவர் கர்தினால் மோறோன் மார் பசாலியோஸ் கிளிமீஸ் காதோலிக்க ஆண்டகை அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சரான மாண்புமிகு திரு.மனோ தங்கராஜ் அவர்கள் மிட்ஸ் ஜூபிலி நிறைவு விழாவின் நல்வாழ்த்துக்களை கூறி சிறப்பான வாழ்த்துரையும் வழங்கினார். ஓய்வு பெற்ற ஆயர் யூஹானோன் மார் கிறிஸ்டேஸ்டேம் ஆண்டகை அவர்கள் (மலங்கரை கத்தோலிக்க திருஅவை பத்தனம்திட்டை) வாழ்த்துரை வழங்கினார்.

மலங்கரை கத்தோலிக்க திருஅவையின் சினடு கமிஷ்னரின் செயலர் அருட்தந்தை ஜார்ஜ் வெட்டுக்காட்டில் கலந்து கொண்டார்கள். கோள்பிங் இந்தியாவின் நேஷனல் இயக்குநர் Rev.Dr. மரியசூசை அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். டாசோஸ் இயக்குநர் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பிதுரை அவர்கள் கலந்து கொண்டார். நாகர்கோவில் சமூக பாதுகாப்பு துறை அலுவலர் திருமதி. சரோஜினி அவர்கள் கலந்து கொண்டு பெண் குழந்தைகளுக்கான சமூக பாதுகாப்பு திட்டங்கள் பற்றிய கருத்துகள் பகிர்ந்து கொண்டார்கள். மார்த்தாண்டம் வர்தக சங்கத்தின் சமூக ஆர்வலர் திரு. சிந்துகுமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

மிட்ஸ் ஜூபிலி நலதிட்ட உதவிகளான "WAY SIDE PETTY SHOP" என்ற திட்டத்தில் 9 பயனாளிகளுக்கு சிறுகடையும் மற்றும் கோள்பிங் மாங்கல்ய திட்டத்தின் கீழ் கிடாரக்குழியை சார்ந்த கோல்பிங் உறுப்பினர் திருமதி. மேபல் அவர்களின் மகள் செல்வி. நிஷா திருமணத்திற்கு உதவித் தொகை சான்று வழங்கப்பட்டது, MIDS Roof என்ற பெயரில் வெள்ளிவிழா நினைவாக புது வீடு கட்ட ஒரு பயனாளிக்கு உதவி தொகையும், SAFPI திட்டத்திலிருந்து கோரோனா-19 பாதிப்புக்குள்ளான 25 குடும்பங்களின் மறுவாழ்வுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டத்தை துவங்கி வைக்கும் விதமாக சிறுதொழில் துவங்க பின்குளத்தை சார்ந்த N. புஷ்பம் என்ற பயனாளியின் குடும்பத்துக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையும் வழங்கப்பட்டது.

மேலும் மிட்ஸ் பணியாளர்களை கௌரவிக்கும் வகையில் பணியாளர்களுக்கு கர்தினால் அவர்களால் சால்வேயும், கேடயமும் வழங்கப் பட்டது. மிட்ஸ் இயக்குநர் அவர்கள் அனை வருக்கும் நன்றியுரை கூறினார். விழாவிற்கு அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், முன்னால் மிட்ஸ்-ல் பணியாற்றிய பணியாளர்கள், வங்கி மேலாளர்கள், குழு / கோள்பிங் பொறுப்பாளர்கள், தளிர்கள் உலக மாணவர்களின் பிரதிநிதிகள் , பெண்கள் கூட்மைப்பு பிரதிநிதிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் என 1000-த்திற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்கப்பட்டது.



அதிகாரம் பத்து ஆண்டுகள் மட்டுமே நிலைத்திருக்கிறது ஆனால், செல்வாக்கு நூறு ஆண்டுகள் கடந்த பிறகும் மங்குவதில்லை. - கொரியப் பழமொழி




MIDS SILVER JUBILEE




MIDS


MIDS


25 YEARS OF SERVICE TO
MIDS
SILVER JUBILEE
WAY SIDE - PETTY SHOP

WWW.EXPLOREWITHSAG.IN

Explore with SAG

TRAVEL BEYOND YOUR DREAMS

Scan this code to Subscribe EXPLORE WITH SAG

டோனா சாரிகள்

Wholesale & Retail

நெல்லிக்காலை, 9789779708



# கீர்த்தி

ஹாலோ பிரிக்ஸ் &
இண்டர்லாக்



Mob: **9443009089**
**9944046300**

Prop. Jayaram

# JAYARAM
## Auto Electrical Works



Ottamaram,
Kaliakkavilai

Cell : **9965911342,**
**9786009504**



குறிப்பு : Exide, Amaron, SF Sonic பேட்டரிகள் கிடைக்கும்





- ஊர் ஊராய்ச் சுற்றினாலும் உரிய இடத்துக்கு வந்து சேருவான்?
- காக்கைப்போல் கறுப்பு, வாயால் மென்றால் நீலம் அது என்ன?
- பிறப்புடன் வந்தது; இறப்புடன் நிற்கும் அது என்ன?
- பள்ளிக்கூடம் போகாமல் பாடத்தைப்படிக்காமல் சரியாய்ச் சொல்வான் கணக்கு?
- என்தாயோ கடல், தந்தையோ சூரியன் என்னை விரும்பாத வீடே இல்லை அது என்ன?
- உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்?
- வாயைத் திறந்த வாயாடி ஓயாமல் அழுகின்றாள்?
- தச்சன் செய்யாத பெட்டி, தானே திறந்து மூடும் பெட்டி அது என்ன?
- பூக்காத பூ
- கானம் இனிப்பு அவனோ கறுப்பு அது என்ன?

**விடைகள்**

1. தபால்
2. நாவல் பழம்
3. மூச்சு
4. கால்குலேட்டர்
5. உப்பு
6. தராசு
7. தண்ணீர்க்குழாய்
8. கண்
9. குங்குமப்பூ
10. குயில்

**கோள்பிங் கூட்டம் - பாத்திமாநகர் கோள்பிங் குடும்பம்**



## சமையல் குறிப்புகள்

# அப்பளத்துவையல்

பொரித்த ஒரு அப்பளத்தை நொறுக்கி, இரண்டு டீஸ்பூன் துருவிய தேங்காய், கறிவேப்பிலை, புளி, ஒன்றிரண்டு பச்சை மிளகாய், உப்பு சேர்த்து மிக்ஸியில் அரையுங்கள். அசத்தலான அப்பளத்துவையல் ரெடி!

# பருப்பு சட்னி

### தேவையான பொருட்கள்

துவரம்பருப்பு - ½ கப் , பூண்டு - 6 பற்கள், வரமிளகாய் - 6, மிளகுத்தூள் - 1 தேக்கரண்டி, தேங்காய் துருவல் - ¼ கப் உப்புத்தூள் தேவையான அளவு

### தாளிக்க

கடலெண்ணெய் - 1 மேஜைக்கரண்டி, கடுகு- ½ தேக்கரண்டி, உளுந்தம் பருப்பு - ½ தேக்கரண்டி, கறிவேப்பிலை - 1கைப்பிடி

### செய்முறை

1. ஒரு வடச்சட்டியில் எண்ணெய் விடாமல் துவரம்பருப்பு, வரமிளகாய், மிளகு போட்டு நன்றாக வறுக்கவும்
2. பிறகு அடுப்பை அணைத்துவிட்டு அதில் தேங்காய் துருவல் மற்றும் பூண்டு பற்களை சேர்த்து அதே சூடில் சிறிது வதக்கவும்
3. வடச்சட்டியில் உள்ள கலவையை மிக்ஸியில் சேர்த்து அதனுடன் தேவையான அளவு உப்பு சேர்த்து சிறிது சிறிதாக தண்ணீர் தெளித்து நன்றாக நைசாக விழுதாக அரைத்து கொள்ளவும்
4. வடச்சட்டியில் கடலெண்ணெய் விட்டு அது நன்றாக காய்ந்ததும் அதில் கடுகு சேர்த்து நன்றாக வெடிக்க ஆரம்பித்ததும் அதில் உளுந்தம்பருப்பு சேர்த்து சிவக்க வதக்கவும். பிறகு கறிவேப்பிலை சேர்த்து நன்றாக வதக்க வேண்டும்.
5. இந்த தாளியை அரைத்து வைத்துள்ள துவையலில் கலந்து சாப்பிட பரிமாறவும்.

ஒரு மனிதனின் ஒருநாள் உணவிற்கு மீனைத் தருவதை விட அவனது வாழ்நாள் முழுவதும் உணவைப் பெற அவனுக்கு மீன் வளர்க்கக் கற்றுத் தருவதே மேலானது

# குடும்ப வளர்ச்சித்திட்டம் - I



மார்த்தாண்டம் கிளஸ்டருக்கு உட்பட்ட குடும்ப வளர்ச்சி திட்ட பயனாளிகளின் கூடுகை கூட்டமானது 13.08.2022 அன்று மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் அரங்கத்தில் வைத்து ஒருங்கிணைப்பாளர் திருமதி. வினிதா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் குடும்ப வளர்ச்சி திட்ட பயனாளிகள் அனைவரும் அவரவர்க்கென தெரிந்துகொள்ளப்பட்ட சிறு தொழில்களை செய்து முன்னேற வேண்டும் என்ற கருத்துகள் பகிரப்பட்டது. ஆடு வளர்த்தல், கோழிவளர்த்தல், பசு வளர்த்தல், சிறிய பெட்டிக்கடை அமைத்தல் போன்ற தொழில்கள் செய்து வருமானத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்னும் கருத்தும் கூறப்பட்டது. மேலும் குடும்ப வளர்ச்சி திட்ட புதிய செயல்திட்டங்கள் பற்றிய விளக்கங்களும் தெரிவிக்கப்பட்டது. கூட்டத்திற்கு 23 நபர்கள் வருகை தந்தார்கள். அடுத்த கூட்டங்களில் பயனாளிகள் ஒழுங்காக வரவேண்டும் என்றும் கூறப்பட்டது.

# Changing the Way We Care

தமிழ்நாடு சமூகசேவை மையம் மற்றும் மிட்ஸ் நிறுவனமும் இணைந்து செயல்படுத்தும் Changing the Way We Care திட்டத்தின் தன்னார்வலர்களின் ஒருங்கிணைப்பு கூட்ட மானது 31.08.2022 அன்று டாசோஸ் மற்றும் CRS பணியாளர்களின் தலைமையில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

மேலும் இத்திட்டத்தில் வழியாக மாதிரிக்குடும்பம் என்ற தலைப்பில் 6 இடங்களில் கிராமிய நடனப்போட்டிகள் நடைபெற்றன. இறுதிச்சுற்றுப்போட்டி மிட்ஸ் அளவில் 31-08-2022 அன்று நடைபெற்றது. போட்டி இறுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சிறப்பு சொற்பொழிவாளராக திரு.பால்ராஜ் (மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA தலைவர்) அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். வெற்றிபெற்ற போட்டியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.







இலச்சியங்கககளை சிலைகளைப்போல கல்லில் உருவாக்க வேண்டும். பனிக்கட்டியால் அவற்றை உருவாக்கினால் அது உருகித்தான் போகும் - ஸ்விப்ட்


# மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு (MTT)

தளிர்கள் குழந்தைகளின் மிட்ஸ் அறிவுத் திறன் தேர்வு கீழ்கண்ட நாள்களில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

- 30 அக்டோபர் 2022, ஞாயிறு (மதியம் 3.00 - 4.30)
- 27 நவம்பர் 2022, ஞாயிறு (மதியம் 3.00 - 4.30)




அன்புக் காட்டு ஆனால் அடிமையாகிவிடாதே
இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே
பணிவாய் இரு ஆனால் கோழை ஆகாதே
கண்டிப்பாய் இரு ஆனால் கோபபடாதே
சிக்கனமாய் இரு ஆனால் கஞ்சனாகதே
சுறுசுறுப்பாய் இரு ஆனால் பதட்டப்படாதே
தர்மம் செய் ஆனால் ஆண்டியாகிவிடாதே
பொருளைத்தேடு ஆனால் பேராசைப்படாதே
உழைப்பை நம்பு ஆனால் கடவுளை
மறந்துவிடாதே



**ஜா. ஜில்லியா ஆஸ்மி**
*தேனிகுளம்*




அன்பானவள் அம்மா
ஆறுதல் கொடுப்பவள் அம்மா
இன்பத்தின் எடுத்துக்காட்டு அம்மா
ஈகை குணமுள்ளவள் அம்மா
உயிரைக் கொடுப்பாள் அம்மா
ஊக்கம் கொடுப்பாள் அம்மா
எல்லாம் ஆனவள் அம்மா
ஏழு கனவு ஊட்டிய அம்மா
ஐயம் போக்குவாள் அம்மா
ஒரே தெய்வம் அம்மா
ஓடி வந்தணைப்பாள் அம்மா



**E.M. Anu Vaishali**
*Thenikulam*




எங்கிருந்தோ வந்து !
உன் இனிய பாச பிணைப்பில்
என்னை நினைக்க வைத்தாய் !
இன்னுமே நான்
ஆவலாக தானே உள்ளேன் !
என்னோடு ஐக்கியமாக
மீண்டும் வந்துவிடு மழையே !
நீ விட்டு சென்ற இடத்திலேயே
காத்துக்கிடக்கின்றேன் உனக்காக !
ஈரம் காய்வதற்குள்
முன் மீண்டும் வந்து
என் ஸ்பரிசத்தை
உன் அன்பாய் அணைத்து விடு !



**• A. Snow Merbin Jeniksha •**

அதிகாரம் பத்து ஆண்டுகள் மட்டுமே நிலைத்திருக்கிறது ஆனால், செல்வாக்கு நூறு ஆண்டுகள் கடந்த பிறகும் மங்குவதில்லை. - கொரியப் பழமொழி


❖ நண்பர்கள் நல்ல குணத்துடன் இருக்க வேண்டும்
❖ ஆபத்து வரும் பொழுது நண்பர்கள் உதவ வேண்டும்
❖ நண்பர்கள் அனைவரிடமும் அன்பாய் இருக்க வேண்டும்
❖ நண்பர்களிடம் கெட்ட பண்புகள் இருக்க கூடாது
❖ நண்பர்கள் நம்முடன் ஒற்றுமையாய் இருக்க வேண்டும்
❖ நண்பரிடம் அனைத்து காரியங்களையும் பகிர்ந்து கொள்ள வேண்டும்
❖ நண்பர்கள் யாரையும் குறித்து குறை சொல்லக்கூடாது
❖ நண்பர்கள் பெரியவரை மதித்து நடக்க வேண்டும்
❖ நண்பர்கள் பெற்றோருக்கு கீழ்படிய வேண்டும்
❖ கடவுளுக்கு உகந்தவராய் வாழ வேண்டும்

- எந்த உறவு பிரிந்தாலும் நண்பன் என்ற உறவு பிரியாது
- நண்பர்களிடையே சண்டை போடாமல் ஒற்றுமையாக இருந்தாலே நன்மை



**நண்பர்கள் குறித்து தளிர்கள் உலக மாணவர்கள் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள்:**

- நண்பன் இல்லாமல் வாழ்க்கை இல்லை
- நண்பன் என்ற உறவு உயிருக்கும் மேலான உறவு
- நல்ல நண்பன் இருந்தால் வாழ்க்கையில் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம்
- இந்த உலகம் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் நண்பன் என்ற உறவு அதைவிட பெரிது
- நண்பனை பிரிந்து இந்த உலகத்தில் வாழ்வது கடினம்
- நமது மகிழ்ச்சியிலும் துன்பத்திலும் பங்கு கொள்கிறவன் நண்பன்
- நண்பர்கள் என்றால் நம்பிக்கை ஆனவர்களாய் இருக்க வேண்டும்
- நண்பர்களிடம் பாசமாய் இருக்க வேண்டும்



## அழகு குறிப்பு

உதடு எப்படி கருப்பாக இருந்தாலும் கலராக மாற்ற ஒரு எளிதான வழி


### தேவையான பொருட்கள்

1. எலுமிச்சைப்பழம் - அரைத்துண்டு
2. வெள்ளைச்சர்க்கரை - சிறிதளவு
3. தேன் - ஒரு தேக்கரண்டி
4. தேங்காய் எண்ணெய் - ஒரு தேக்கரண்டி

### செய்முறை

முதலில் கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை சரியான அளவில் எடுத்துக்கொள்ளவும். பிறகு எலுமிச்சம் பழம் மீது சிறிதளவு வெள்ளைச்சர்க்கரை தூவி உதடுகள் மீது லேசாக தடவி விடவும். இதனை 5 நிமிடம் செய்ய வேண்டும். பிறகு இதைப்போல ஒரு தேக்கரண்டி தேன் மற்றும் தேங்காய் எண்ணெய் எடுத்துக்கொள்ளவும். இரண்டையும் நன்கு கலந்து உதடு மீது தடவி 15 நிமிடம் உலர வைக்கவும். இதனை தொடர்ந்து 15 நாள்கள் காலை மற்றும் மாலை ஆகிய இரண்டு வேளைகள் செய்து வந்தால் உதடு எவ்வளவோ கருப்பாக இருந்தாலும் கலராக மாற்ற முடியும். இது எந்த வித பக்கவிளைவும் இல்லாத மருத்துவம் ஆகும். மேலும் இது மிகவும் எளிதான வழிமுறை ஆகும்.

## கோதுமையில் சப்பாத்திக்கு பதில் கோதுமை தோசை



**தேவையானவை:**

கோதுமை மாவு, தண்ணீர், தோங்காய் துருவல், உப்பு, வெங்காயம் நறுக்கியது, மல்லி இலை, கறிவேப்பிலை, வெந்தயம், இஞ்சி நறுக்கியது.

ஒரு டம்ளர் கோதுமை மாவு எடுத்து அதில் அரை டம்பளர் அளவு தண்ணீரும் எடுத்து உப்பு போட்டு நன்றாக கலக்கவும். அதில் தேங்காய் துருவல் மற்றும் வெங்காயம் நறுக்கியது மல்லிஇலை நறுக்கியது கறிவேப்பிலை நறுக்கியது, சிறிது வெந்தயம், இஞ்சி நறுக்கியது ஆகியவற்றை போட்டு நன்றாக கலக்கவும். பின்னர் தோசை கல்லில் ஊற்றி வேக வைக்கவும். சுவையான கோதுமை தேசை ரெடி.

**ஆஹா ஒகோ**

**சாப்பிட்டு பாருங்கள் சுவையோ சுவை, ருசியோ ருசி**




**Jesna Rubin**

## அம்மா



என் முகம் பார்க்கும் முன்னே
என் குரல் கேட்கும் முன்னே
என் குணம் அறியும் முன்னே
என்னை நேசித்த ஒரே இதயம்
என் அம்மா மட்டும் தான்!

**கிறிஸ்டின் செல்வராணி**
*மிட்ஸ் இடைக்காடு*





**Jijo**



☞ என்ன மச்சி ஞாயிற்றுகிழமை கறி சாப்பாடு, லெக் பீஸா சாப்டுட்டு தூக்கமா?
☞ அடேய்.. டி.நகர் சரவணா ஸ்டோர் மொட்ட மாடில லெமன் சாதம் சாப்டுட்ருக்கேன்டா..
☞ காலைல 9.00 மணிக்கு புடவை எடுக்க போனாவங்க இன்னும் திரும்பல..

---

**டாக்டர் :** கண் ஆபரேஷனுக்கு அப்புறம் உங்களுக்கு எப்படி இருக்கு?

**நோயாளி :** போயும் போயும் இந்த கிழவி நர்ஸையா சைட் அடிச்சோம்னு தோணுது டாக்டர்....!

# கணக்கு பயிற்சி



மிட்ஸ் நிறுவனத்தில் 474 சுய உதவி குழுக்கள் நன்முறையில் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்களின் பொறுப்பாளர்களுக்கான கணக்கு பயிற்சியானது செப்டம்பர் மாதத்தின் பல்வேறு தேதிகளில் கிளஸ்டர் வாரியாக நடைபெற்று வருகிறது. இந்த பயிற்சியினை தேர்ச்சி பெற்ற மிட்ஸ் அமைப்பாளர்கள் வழங்கி வருகின்றனர். மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப் மற்றும் திட்ட ஒருங்கணைப்பாளர் திரு. பேட்ரிக் ஆன்றனி ஆகியோர் இந்த பயிற்சிகளை பார்வையிட்டு ஊக்கப்படுத்தி வருகின்றனர்.



ஆற்றூர் கிளஸ்டர்
(சுயஉதவிக்குழு)



ஆதிச்சவிளாகம் கிளஸ்டர்
(வலியவிளை சுயஉதவிக்குழு)



மந்தாரம்புதூர் கிளஸ்டர்
(மிட்ஸ் கங்கா சுய உதவி குழு)

# புற்றுநோய் பரிசோதனை முகாம்

மிட்ஸ் எழுவோம் இயக்கம் சார்பாக மிட்ஸ் நிறுவனமானது Sreeram cancer trust -டன் இணைந்து 26.08.2022 அன்று மிட்ஸ் நிறுவனத்தில் வைத்து புற்றுநோய் கண்டறியும் முகாமினை நடத்தியது. இந்த முகாமினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் துவங்கி வைத்தார்கள். இந்த முகாமில் ஒரு மருத்துவர் மற்றும் ஐந்து செவிலியர்கள் கலந்து கொண்டு பரிசோதனை செய்தனர். இந்நிகழ்வில் டாசோஸ் இயக்குநர் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பி துரை, துணை இயக்குநர் அருட்தந்தை ஆரோக்கிய சாமி ஆகியோருடன் TASOSS, CRS நிறுவன பணியாளர்களும் கலந்து கொண்டனர். இந்த முகாமில் மொத்தம் 27 பயனாளிகள் கலந்து கொண்டனர். மருத்துவ உதவி தேவைப்பட்ட நபர்களுக்கு வழிகாட்டுதலும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.








மற்றவர்களின் உரிமைகளை நாம் அவர்களுக்கு வழங்கும் போது, நாம் நமது சொந்த உரிமைகளுடன் தேசத்தின் உரிமைகளையும் பெறுவோம் - ஜான் ஃபிட்ஸ் ஜெரால்டு கென்னடி

# தளிர்கள் உலகம்

தளிர்கள் உலக திட்டத்திலுள்ள 12-ம் வகுப்பு பொது தேர்வு எழுதி திட்டத்திலிருந்து விடைபெற்று செல்பவர்களின் கூட்டம் 16-06-2022 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. தளிர்கள் உலக குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் இத்திட்டத்திலிருந்து பெற்ற அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். குழந்தைகளின் படிப்பின் உயரிய நோக்கத்தை அடைவதற்கான வழி முறைகள் பற்றியும், குடும்பத்திற்கும் சமூதாயத் திற்கும் ஏற்றப்படி வாழவேண்டும் என்னும் கருத்துக்கள் மிட்ஸ் இயக்குநர் மற்றும் திட்ட அலுவலர் அவர்களால் பகிர்ந்துகொள்ளப்பட்டது. மேற்படிப்பிற்கு செல்லும் 83 குழந்தைகளுக்கு சிறுசேமிப்பு தொகை மொத்தம் ரூ.13,60,662/- வழங்கப்பட்டது.

**பங்கேற்பாளர்கள் பகிர்ந்து கொண்ட அனுபவங்கள்**

தளிர்கள் உலக திட்டம் வழியாக மிட்ஸ் அலுவலகத்தில் ஒவ்வொரு மாதமும் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன. பயிற்சி வகுப்புகள் பயனுள்ளதாக இருந்தது. டிசம்பர் (கிறிஸ்மஸ்) மற்றும் மே (புதிய கல்வியாண்டு) மாதங்களில் எங்களுக்கு கல்வி உதவித்தொகை கிடைப்பது, புத்தகங்கள், சீருடைகள் மற்றும் கல்விக்கான உபகரணங்கள் வாங்க உறுதுணையாக இருந்தது. டிசம்பர் காலகட்டத்தில் 25 நாள்களும் ஒவ்வொரு சிறப்பு செயல்கள் செய்வதற்கான படிவம் தந்து அதைச்செய்ய ஊக்கப்படுத்துவது எங்களை புது மனிதர்களாக மாற்றுவதற்கு ஒரு விழிப்புணர்வு கொடுப்பதாக இருந்தது. ஒவ்வொரு மாதமும் மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு நடத்துவது போட்டித்தேர்வு பற்றிய பயம் நீக்கி, வேலை வாய்ப்பிற்கான தடங்களை உருவாக்கி தருவதாகவும் இருப்பதில் எவ்வித ஐயமுமில்லை. கோடை விடுமுறையையொட்டி மூன்று நாட்கள் மிட்ஸ் அலுவலகத்தில் தங்கி நின்று பயின்றதும் மறக்க முடியாத நிகழ்வாக திகழ்ந்தது. சுற்றுலா பயணம் (கன்னியாகுமரி, திருவனந்தபுரம், . . . . .) மேற்கொள்வது எங்களுக்கு கல்வி சம்மந்தமான படிப்புகளை சென்று பார்ப்பதற்கான சிறந்த வாய்ப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. குழந்தைகள் தினவிழாவின் போது சிறப்பு போட்டிகள் நடத்தி வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்குவதும், விழாவின் போது கலைநிகழ்ச்சிகளில் எங்களை ஈடுபடுத்தி எங்களுடைய திறமைகள் மற்றும் தலைமைப் பண்பை வெளிக்கொணர்வதும், பொங்கல் விழாவின் போது எங்களுக்கு உதவிச்செய்கின்ற உதவியாளர்கள் வந்து விழாவில் பங்கெடுப்பது மிக சிறப்பாகவும் உற்சாகமாகவும் இருந்தது. எங்களுடைய வளர்ச்சிக்கு அறிவு புகட்டுவது மட்டுமல்லாமல் உதவித்தொகை வழங்குவதும் மிகுந்த பயனுள்ளதாகவும் அமைந்தது. பெற்றோர்களுக்கு விழிப்புணர்வுகள், குடும்பத்தை வலுப்படுத்தும் பயிற்சிகள், தொழிற்பயிற்சிகள் வழங்கி அறிவூட்டியது சமூகத்தில் ஒரு உயர்ந்த நிலையை உணரச்செய்தது. தளிர்கள் திட்டத்திலிருந்து வெளியே சென்றாலும் மிட்ஸ் ஆஸ்தி என்ற திட்டம் வழியாக மிட்ஸ் நிறுவனத்தோடு இணைந்து செயல்பட வழிவகை செய்வது மிகவும் சிறப்புக்குரியது.

## மிட்ஸ் ஜீவன் திட்டம்



மிட்ஸ் ஜீவன் திட்டம் சார்பாக புற்று நோயால் பாதிக்கப்பட்ட 5 நபர்களுக்கு மருத்துவ செலவிற்காக நபருக்கு ரூபாய் 5,000/- வீதம் மொத்தம் ரூபாய் 25,000 /- வழங்கப்பட்டது.





# விருட்சம் என்ற கடன் திட்டம்

விருட்சம் என்ற நுண்கடன் திட்டத்திலிருந்து மார்த்தாண்டம், நாகர்கோவில், களியக்காவிளை ஆகிய பணிமண்டலத்திற்குட்பட்ட சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள் 112 நபர்களுக்கு ரூபாய் 56,00,000/- கடனாக வழங்கப்பட்டது. குழு உறுப்பினர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு இத்திட்டம் மிகவும் உறுதுணையாக அமைந்துள்ளது.



# குடும்ப வளர்ச்சித்திட்டம் - II

மிட்ஸ் நிறுவனத்தில் குடும்ப வளர்ச்சி திட்டம் வழியாக ஏராளமான குடும்பங்கள் பயன் பெற்று தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தியுள்ளன. தற்போது குடும்ப வளர்ச்சி திட்ட தேசிய அலுவலகம் இரண்டாம் அலகு துவங்குவதற்கும் அதன் வழியாக பொருளாதாரத்தில் பின்தங்கிய 200 குடும்பங்களுக்கு சிறு தொழில்கள் செய்ய உதவுவதற்கும் முன்வந்துள்ளது. அதற்காக மிட்ஸ் பணி மண்டலங்களுக்கு உட்பட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள், சுய உதவி குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களை கிளஸ்டர் வாரியாக பிரித்து கூட்டங்கள் நடத்தி வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.



# MIDS MMWS

MIDS MMWS திட்டத்தின் புதிய மற்றும் புதுப்பித்தல் படிவமானது மிட்ஸ் அமைப்பாளர்கள் வழியாக வினியோகிக்கப்பட உள்ளது. கோல்பிங் மற்றும் சுய உதவி குழு உறுப்பினர்கள் நவம்பர் மாதத்திலிருந்து அமைப்பாளர் வழியாக விண்ணப்பதாரர் படிவம் பெற்று பூர்த்தி செய்து ரூ100/- செலுத்தி MMWS திட்டத்தில் உறுப்பினராகலாம். இத்திட்டத்திலிருந்து சுயஉதவி / கோள்பிங் குழுக்களில் உறுப்பினர்களாக இருந்து இறந்த 6 நபர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.10000/- வீதம் மொத்தம் ரூ.60000/- காசோலையானது கிளஸ்டர் கூட்டங்களில் வைத்து வழங்கப்பட்டது.





# குறுக்கெழுத்துப்போட்டி

**உங்கள் அறிவிற்கு ஒரு சவால்**

**இடமிருந்து வலம்**

1. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அருவி எது?(6)
2. அழகு சாதனங்கள் தயாரிக்க அதிகம் பயன்படுத்தும் பழம் எது ? (4)
3. பூட்டுத்தொழிலுக்கு பெயர் பெற்ற மாவட்டம் எது?(6)
4. ஹூண்டாய் கார் நிறுவனம் எந்நாட்டைச் சேர்ந்தது?(3)
5. கேரளா மக்களின் முதன்மையான பண்டிகை எது?(3)
6. நாம் உண்ணும் பூண்டில் என்ன அமிலம் இருக்கிறது?(5)
7. நமது நாட்டில் முதன் முதலில் மரம் நடு விழாவை தொடங்கி வைத்தவர் கே.எம். . . . . . . . . . . .?(3)
8. காளிதாஸ் சம்மான் என்னும் தேசிய விருது எந்த பணிக்காக வழங்கப்படுகிறது ?(3)
9. திபெத் நாட்டில் எந்த வகை எருது காணப் படுகிறது?(2)

**மேலிருந்து கீழ்**

1. இந்தியாவின் இரண்டாவது பெண் ஜனாதிபதி பெயர்?(8)
10. உலக உணவு தினம் அக்டோபர் மாதம் எந்த நாள் . . . . . . . . (2)
11. விழுமின், எழுமின், உழைமின் என்று கூறியவர் யார்?(10)
12. உண்டி எனப்படுவது எது?(8)
13. இந்தியாவில் மிகப்பெரிய நூலகம் உள்ள இடம் எது?(5)
14. தரையில் வாழக்கூடிய பறவை எது?(2)

**கீழிருந்து மேல்**

15. வீடுகளுக்கு கதவுஎண் கொடுக்கும் முறையை கொண்டு வந்த நாடு எது? (4)
16. எந்த மாநில மொழியிலும் பயன்படுத்த இயலும் சிறிய கம்ப்யூட்டர் (2)
17. பெட்ரோலியம் என்ற கிரேக்க சொல்லின் பொருள் என்ன?(6)
18. லோண் என்பதின் தமிழ் சொல்?(3)
19. . . . . . . . . . . . சமவெளி நாகரீகம் நிகழ்ந்த காலம் செம்பு-கற்காலம் ?(3)
20. ஜீலம் நதிக்கரையில் அமைந்துள்ள நகர் எது?(4)

**வலமிருந்து இடம்**

21. உலகப் புத்தக தினமாக எந்த எழுத்தாளரின் பிறந்த தினம் கொண்டாடப்படுகிறது?(6)
22. எந்த மரத்திற்கு இலையுதிர் காலமே கிடையாது?(3)
23. நதிக்கரை நகரம் என்று அழைக்கப்படுவது எது?(3)
24. தேசிய மாம்பழ தோட்டம் என்று அழைக்கப்படும் நகரம் எது?(5)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 11 | | 12 | |
| | 10 | | 5 | | | | | | |
| | | 16 | | | 22 | | | | |
| 2 | | | | | 13 | | 20 | | |
| 3 | | | | 18 | | | | | |
| | 4 | | 9 | | | | | | 17 |
| | 14 | | | 24 | | | | | |
| | | 8 | | | | | 15 | | |
| 6 | | | | | ■ | | 7 | | 19 |
| | | | | | 21 | | | | 23 |

**குறிப்பு :** சரியான பதில் எழுதும் நபருக்கு குலுக்கல் முறையில் தேர்வு செய்து தக்க பரிசு வழங்கப்படும். விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 2022 நவம்பர் 30. அதற்கு பின் வரும் விடைகள் நிராகரிக்கப்படும். புத்தகத்தின் இந்த பக்கத்தில் விடைகளை எழுதி கட் செய்து தபாலில் அல்லது அமைப்பாளர் வழியாக அனுப்பவும். நகல் அனுப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**முகவரி :** ஆசிரியர், ஐக்கியசுடர், மிட்ஸ் அலுவலகம், இடைவிளாகம், கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629163, தமிழ்நாடு.

**கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் பங்கு பெற்றோர்**

திருமதி. T. நிஜா, மிட்ஸ் ராஜீவ் காந்தி நகர் சுய உதவி குழு, ஆற்றூர் கிளஸ்டர்
திருமதி. T. தனலட்சுமி, தட்டான்விளை, மார்த்தாண்டம் கிளஸ்டர்
திருமதி. S. ஷீலா, மிட்ஸ் தெறம்புதட்டுவிளை சுய உதவி குழு, ஆற்றூர் கிளஸ்டர்

**கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்றவர்**

திருமதி. T. நிஜா, மிட்ஸ் ராஜீவ் காந்தி நகர் சுய உதவி குழு, ஆற்றூர் கிளஸ்டர்

**பரிசுகள் ஆண்டிறுதியில் வழங்கப்படும்.**
**போட்டியில் ஆர்வத்துடன் பங்கு பெற்ற அனைத்து சுய உதவி குழு உறுப்பினர்களுக்கும் மிட்ஸ் நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துக்கள். தொடர்ந்து உங்கள் ஆதரவினை வேண்டுகிறோம்.**

---

# வாசகர் கவனத்திற்கு

மிட்ஸ் ஐக்கிய சுடர் இதழில் தங்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. மேலும் இவ்விதழில் தங்களின் விளம்பரங்கள் வெளியிட விரும்பினால் அதற்கான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

---

## விளம்பரம்

**இதழின் கடைசி பக்கம் (Back Cover Page)**

☞ முழு பக்கத்திற்கு கட்டணம் (கலர்) - Rs.2500 ☞ அரை பக்கத்திற்கு கட்டணம் (கலர்) -Rs.1250

---

**இதழின் முதல் பக்கத்தின் உள்பகுதிக்கு(Front Inner Page)**

☞ அரை பக்கத்திற்கு கட்டணம் (கலர்) -Rs.1000
☞ முழு பக்கத்திற்கு கட்டணம் (கலர்) -Rs.2000

---

**இதழின் கடைசி பக்கத்தின்உள் பக்கம் (Back Inner Page)**

☞ அரை பக்கத்திற்கு கட்டணம் (கலர்) -Rs.750 ☞ முழு பக்கத்திற்கு கட்டணம் (கலர்) -Rs.1500

---

**பிறந்தநாள் மற்றும் திருமண வாழ்த்துக்கள் (Black & White)**

☞ கால் பக்கம் கட்டணம் - Rs. 250 ☞ அரை பக்கத்திற்கு கட்டணம் -Rs.500
☞ முழு பக்கத்திற்கு கட்டணம் - Rs.1000

---

விளம்பரங்கள் வெளியிட விரும்புவர்கள் மிட்ஸ் அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் தங்களின் சொந்த படைப்புகள் மற்றும் விமர்சனங்களை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மிட்ஸ் அலுவலகம்**
இடைவிளாகம், கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல்
கன்னியாகுமரி மாவட்டம் - 629 163.
Email : mids.marthandam@gmail.com Website : www.mids.org.in
Ph : 04651 - 263390, 295690


feel the quality of real sound
FL PRO AUDIO
URAMBU Jn KOLLENGODE
Our Services:
Light and Sound for worship,musical events, Dj, meeting, conference, sound installation
Fransingh
Contact No:8903006262,9524403475 , E-mail :flproaudio@gmail.com
Web:www.flproaudio.in

*Everlasting Comfort & Durability*

# Shalom mattresses

**Everlasting Comfort and Durability**



